## இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.5.4.H

எண்ணியல் - தசம எண்களின் வகுத்தல் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

## எண்ணியல் - தசம எண்களின் வகுத்தல் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

1) ஒரு குளிர்பானத் தொழிற்சாலையில் ஒரு நாளைக்கு 3,506.25 லி குளிர்பானம் தயாரிக்கப்படுகிறது. அதனை 1.25 லி கொள்ளளவு கொண்ட சம அளவுள்ள பாட்டில்களில் நிரப்பி ஒரு பெட்டிக்கு 15 பாட்டில்கள் வீதம் வைத்து விற்பனைக்கு அனுப்புகின்றனர். எனில், ஒரு நாளைக்கு எத்தனை பாட்டில்கள், எத்தனை பெட்டிகளில் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன?

குளிர்பானம் நிரப்பப்படும் பாட்டில்களின் எண்ணிக்கை ▶▶ பாட்டில்கள் வைக்கப்படும் பெட்டிகளின் எண்ணிக்கை

குளிர்பானத் தொழிற்சாலையில் ஒரு நாளைக்குத் தயாரிக்கப்படும் குளிர்பானத்தின் அளவு } = 3,506.25 லி

குளிர்பானம் நிரப்பப்படும் பாட்டில்களின் கொள்ளளவு } = 1.25 லி

∴ ஒரு நாளைக்கு விற்பனைக்கு அனுப்பப்படும் பாட்டில்களின் எண்ணிக்கை } $= \frac{3506.25}{1.25} = \frac{3506.25 \times 10^2}{1.25 \times 10^2}$

$= \frac{3506.25 \times 100}{1.25 \times 100} = \frac{350625}{125}$

= **2805 பாட்டில்கள்**

```
        2805
125 ) 350625
      250
      1006
      1000
         625
         625
           0
```

ஒரு பெட்டியில் வைக்கப்படும் பாட்டில்களின் எண்ணிக்கை } = 15 பாட்டில்கள்

∴ 2,805 பாட்டில்களை வைக்கத் தேவைப்படும் பெட்டிகளின் எண்ணிக்கை } $= \frac{2805}{15} = \frac{\cancel{2805}^{187}}{\cancel{15}_{1}} =$ **187 பெட்டிகள்**

ஒரு நாளைக்கு **2,805 பாட்டில்கள், 187 பெட்டிகளில்** விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

2) ஒரு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர் அவர்களது பள்ளி அணி, மாவட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பெற்றதற்காக அதில் கலந்து கொண்ட அனைத்து மாணாக்கர்களுக்கும் 7.5 கி.கி எடையுள்ள இனிப்புகளை 0.25 கி.கி எடையுள்ள சம பங்குகளாகப் பிரித்துக் கொடுத்தார். எனில், எத்தனை மாணாக்கர்கள் போட்டிகளில் கலந்து கொண்டனர்?

உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர் வைத்திருந்த இனிப்புகளின் மொத்த எடை } = 7.5 கி.கி

பிரிக்கப்பட்ட சம பங்குள்ள இனிப்புகளின் எடை } = 0.25 கி.கி

∴ விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட மாணாக்கர்களின் எண்ணிக்கை } $= \frac{7.5}{0.25} = \frac{7.5 \times 10^2}{0.25 \times 10^2}$

$= \frac{7.5 \times 100}{0.25 \times 100} = \frac{750}{25}$


= 30 மாணாக்கர்கள்

```
       30
25 ) 750
     75
      00
```

விளையாட்டுப் போட்டிகளில் **30 மாணாக்கர்கள்** கலந்து கொண்டனர்.

3) ஒரு செவ்வக வடிவ மதிலின் பரப்பளவு 7.424 ச.மீ மற்றும் அதன் நீளம் 3.2 மீ எனில் அதன் அகலம் காண்க.

பரப்பளவு 7.424 ச.மீ



நீளம் 3.2 மீ

செவ்வக வடிவ மதிலின் பரப்பளவு } = நீளம் ($l$) × அகலம் ($b$)

7.424 = 3.2 × அகலம்

3.2 × அகலம் = 7.424

அகலம் $= \frac{7.424}{3.2} = \frac{7.424 \times 10^1}{3.2 \times 10^1}$

$= \frac{7.424 \times 10}{3.2 \times 10} = \frac{74.24}{32}$

= 2.32 மீ

```
      2.32
32 ) 74.24
     64
     10.2
      9.6
        64
        64
         0
```

செவ்வக வடிவ மதிலின் அகலம் **2.32 மீ** ஆகும்.

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/H4DH3lPLyQs


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Friday 7th October, 2022 :: 04:55 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.